28th July 1965]

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் ஆரம்பிக்க இருக்கும் இந்தத் தொழிற் சாலையை எந்த மாவட்டத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக் கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

Match factories

* 14 Q.—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Government match factories in the State; and

(*b*) the amount invested and the persons employed in each of them?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Nil.

(*b*) Does not arise.

தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தித் திட்டம்

* 15 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தில் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 1965–66-ம் ஆண்டில் என்னென்ன வேலைகள் எடுத்துக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : விசேஷ சிறு பாசனத்தின் கீழ் நிறை வேற்றப்படுகிற பாசன வேலைகளை கனம் அங்கத்தினர் குறிப்பிடு கிறார் என்று நினைக்கிறேன். 1965–66-ல் 154 வேலைகளை நிறை வேற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

It is presumed that the Member refers to irrigation works carried out under Special Minor Irrigation Programme. One hundred and fifty-four works are programmed for execution in 1965-66.

திரு. எஸ். முருகையன் : அதிலே வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை வேலைகள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : திரு. சுப்பையா அவர்கள் கேட்டது தஞ்சை ஜில்லாவைப்பற்றியது.

திரு. க. ர. நல்லசிவம் : இதன் மூலமாக எத்தனை ஏக்கர் வசதி பெற இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இது சம்பந்தமான புள்ளிவிவரம் என்னிடம் இல்லை கண்மாய்களைப் பழுதுபார்த்தால், வாய்க்கால்

களில் மேடுகளை அகற்றுதல், புதிதாக குளங்களை வெட்டுதல், சிறு ஏரிகள் வெட்டுதல் எல்லாம் இந்தத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது.

திரு. கோ. சி. மணி : தஞ்சை மாவட்டத்தில் 1965–66-ம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் எத்தனை ?

கனம் திரு. பூ. கக்கன் : சில வேலைகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. ஏற்கனவே, அந்த வேலைகள் முடியாதிருந்தால் கூட தொடர்ந்து நடைபெறுகிறது. மற்ற விவரங்கள் வேண்டுமென்றால் தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : தஞ்சாவூர் ஜில்லாவில் நன்னிலம் தாலுகாவிலுள்ள திருச்சங்கட்டாங்குடி கிராமத்தில் கனம் உணவு அமைச்சர் வந்து பார்த்து வேலைகளை ஆரம்பித்தார்கள். பிறகு பெரிய வேலைகள் ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லி இந்த வேலைகளை நிறுத்திவிட்டார்கள். இந்த வேலைகள் தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும். இருந்தாலும் சில விவரங்கள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது டிவிஷன் வேலைகள் நடைபெற இருக்கின்றன.

Special Minor Irrigation programme-ன் கீழ் பட்டுக்கோட்டையில்.	40	வேலைகள்
Food Production Division புதுக்கோட்டை	42	,,
பெண்ணாறில்	23	,,
கிராண்டு அணைக்கட்	31	,,
காவேரி டிவிஷன்	16	,,
Lower River Conservancy Division	2	,,
	154	

புலவர் கா. கோவிந்தன் : இந்த வருவாய்த்துறை எடுத்து நடத்துகின்ற ஏரிகள் கால்வாய்களில் 50 ஏக்கருக்கு உட்பட்ட நிலங்களை கொண்ட ஏரிகள், கால்வாய் வேலைகளைப் பஞ்சாயத்து யூனியன் செய்யவேண்டும். அதற்கு மேற்பட்டவைகளை உணவுத் துறை செய்யவேண்டுமென்றிருக்கிறது. பஞ்சாயத்துத் துறையில் நிதி இல்லை. ஆகவே, 50 என்று வரையறை இல்லாமல் சம்பந்தப்பட்ட எல்லாக் கால்வாய்களையும், ஏரிகளையும் உணவுத் துறையே செய்வதற்கு அரசாங்கம் வசதி செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியன் ஓரளவு செய்ய வேண்டுமென்றுதான் அரசாங்கம் பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்திருக்கிறது. சில பஞ்சாயத்து யூனியன்களில் செய்கிறார்கள். சில பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களிடையே அபிப்பிராயபேதம் இருப்பதால் செய்யாமல் இருக்கிறார்கள். உணவு உற்பத்தித் துறையில் பஞ்சாயத்துக்களும் பங்கு கொள்ள வேண்டுமென்றுதான் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

28th July 1965]

திரு. கோ. சி. மணி : காவேரி டிவிஷனில் செய்யப்படுகிற 16 வேலைகள் தவிர இந்த ஆண்டு இன்னும் அதிகமாக வேலைகள் செய்வதற்கு அரசாங்கத்திடம் வசதி இருக்கிறதா, தொடர்ந்து வேலைகள் நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

Special Minor Irrigation Programme

* 16 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state the details of work under the Special Minor Irrigation Programme targetted during the year 1963–64 and the number carried out so far?

THE HON. SRI P. KAKKAN : Under the Special Minor Irrigation Programme, during the year 1963–64, eight hundred (800) works were targetted at an estimated cost of Rs. 198.43 lakhs and one thousand (1,000) works were completed at a cost of Rs. 273.58 lakhs.

1963–64-ல் விசேஷ சிறுபாசனத் திட்டத்தின் கீழ், ரூ. 198.43 லட்சம் செலவில் 800 வேலைகளை முடிக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால், 1,000 வேலைகள் ரூ. 273.58 லட்சம் செலவில் முடிக்கப் பட்டன.

திரு. ஆ. தங்கவேலு : மேற்படி வேலைத் திட்டங்களில் எத்தனை திட்டங்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் திட்டமிடப்பட்டிருக்கின்றன, நிறைவேற்றப்பட்டிருக்கின்றன?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் இத்தகைய சிறிய பாசன திட்டங்களினால் தான் விவசாயம் செய்யமுடியும் என்ற நிலைமை இருக்கிற காரணத்தினால் விசேஷமாக இந்த மாவட்டத்தில் இத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா? அப்படியானால் அதனுடைய விவரம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : சேலம் மாவட்டத்தில் ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் திட்டத்தின் கீழே அநேக வேலைகள் செய்து முடிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதற்கென்று ஒரு தனி டிவிஷன் போட்டு, எக்ஸிகியூடிவ் என்ஜினியரை நியமித்து, அந்த வேலைகளை கவனிப்பதற்கு அரசாங்கம் முன்வந்திருக்கிறது. இப்பொழுது சில வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சில வேலைகளுக்கு அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறன. சில வேலைகளுக்கு அஸ்திவாரம் போடப்பட்டு வேலைகள் முடிவடைந்துகொண்டிருக்கின்றன.